

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.6.2025) தஞ்சாவூர், மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரசு நலத்திட்டங்கள் குறித்த கண்காட்சி அரங்குகளையும், தஞ்சாவூரின் சிறப்புகள் தொடர்பான கண்காட்சி அரங்குகளையும் பார்வையிட்டார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.6.2025) தஞ்சாவூர், மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அரசு நலத்திட்டங்கள் குறித்த கண்காட்சி அரங்குகளையும், தஞ்சாவூரின் சிறப்புகள் தொடர்பான கண்காட்சி அரங்குகளையும் பார்வையிட்டார்.



முதலமைச்சர் மு.க. மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.6.2025) கல்லணை சுற்றுலா மாளிகையில், மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதையொட்டி டெல்டா மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும் வேளாண் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திருமதி பிரியங்கா பங்கஜம், வ. மோகனச்சந்திரன், மா. பிரதீப் குமார், ஹெச்.எஸ், ஸ்ரீகாந்த், திருமதி. மு.அருணா, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் 15.6.2025) கல்லணை சுற்றுலா மாளிகையில், தஞ்சாவூர், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, புதுக்கோட்டை நாகப்பட்டினம் ஆகிய டெல்டா மாவட்ட விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் சந்தித்து, மேட்டூர் மற்றும் கல்லணையிலிருந்து குறுவை சாகுபடிக்கு குறித்த காலத்தில் தண்ணீரை திறந்து வைத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, தங்களது கோரிக்கைகள் குறித்த மனுவை அளித்தனர்.



முதலாமச்சர் ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (15.6.2025) கல்லணை சுற்றுலா மாளிகையில் தஞ்சாவூர், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, புதுக்கோட்டை நாகப்பட்டினம் ஆகிய டெல்டா மாவட்டங்களின் விவசாயிகள் மற்றும் விளசாபிகள் சங்க பிரதிநிதிகள் சந்தித்து மேட்டூர் மற்றும் கல்லணையிலிருந்து குறுவை சாகுபடிக்கு குறித்த காலத்தில் தண்ணீரை திறந்து வைத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, தங்களது கோரிக்கை குறித்த மனுவை அளித்தனர்.



வேலூர் மாவட்ட திமுக அலுவலகத்தில் நடந்த அவசர செயற்குழு கூட்டத்தில் கழகபொதுச் செயலாளர் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். உடன் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, மாவட்ட பொருளாளர் நரசிம்மன், மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் டாக்டர் வி.எஸ்.விஜய், வேலூர் ரமேஷ், மாவட்ட துணை செயலாளர் டாக்டர் பிரசாத் குமார், தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர் என்.சுப்பிரமணி, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார் மற்றும் மாவட்ட, மாநகர, ஒன்றிய கழக செயலாளர்கள், பகுதி செயலாளர்கள், கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடி வடக்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நடைபெற்றது!











தூத்துக்குடி,ஜூன்.17-

தூத்துக்குடி வடக்கு மாவட்ட ஒன்றிய- நகர- பகுதி- பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் 15.06.2025 அன்று தூத்துக்குடி கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் மற்றும் நாடாளு மன்றக் குழுத் தலைவர் கனி மொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார். மாவட் டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான கீதா ஜீவன் மற்றும் இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் இன்பா ஏ.என்.ரகு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில், சமூக வலைத் தளங்களைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து கழக செய்தித் தொடர்பு மாநில துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி, சமூக வலைத்தளங்களை ஆக்கப்பூர் வமாக எவ்வாறு பயன்படுத்து வது என்பது குறித்து சமூக வலைத்தள செயற்பாட்டாளர் விக்னேஷ் ஆனந்த் ஆகியோர் புதிய நிர்வாகிகளுக்கு பயிற்சி வழங்கினர்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.எம்.மதியழ கன் வரவேற்புரை வழங்கி னார். மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் அருண் சுந்தர் நன்றியுரை கூறினார்.

நீதியரசர் வி.பாரதிதாசன் தலைமையில் – செ.ஏழுமலை எழுதிய

# கலைஞர் - வரலாற்றுச் சுவடுகள் நூல் அறிமுகம்!

## கவிஞர்கள் பூவை செங்குட்டுவன் - காசிமுத்துமாணிக்கம் பங்கேற்பு!

சென்னை, ஜூன், 17 -

புதுக்கவிதை மன் னன் பேராசிரியர் செ. ஏழுமலை எழுதிய ‘கலை ஞர் - வரலாற்றுச் சுவடு கள்’ நூல் அறிமுக விழா நேற்று முன்தினம் (15.6.2025 ஞாயிற்றுக் கிழமை) மாலை 6 மணிக்கு ஒய்.எம்.சி.ஏ. எசுபிளனேடு அரங்கத் தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு தமிழ் நாடு அரசு பிற்படுத்தப் பட்டோர் ஆணைய தலைவர் நீதியரசர் வி. பாரதிதாசன் தலைமை வகித்தார்.

பழம்பெரும் திரைப டப் பாடலாசிரியர் கலைமாமணி கவிஞர் பூவை செங்குட்டுவன் முன்னிலை வகிக்க, கவி ஞர் காசிமுத்துமாணிக் கம் சிறப்புரையாற்றி னார்.

இந்நிகழ்வில் ஔவை அருள் நடராசன், முனைவர். தாமரைக் கண்ணன், புலவர் சீ. கிருட்டிண மூர்த்தி, டி.ஏ., சாயாகுமார், பா. ஆசிர்பாண்டியன், போதகர் மேக்ஸ் பிரேம் சன், ஆ.டென்னனிஸ் பெசனியோ உள்ளிட்ட பலர் கலந்து கொண்ட னர்.